செ.வெ.எண்: 41 நாள்:18.10.2019

## நடுரோட்டில் மயங்கிய முதியவரின் குடும்ப நிலை அறிந்து அவருக்கு முதியோர் உதவித்தொகைக்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் வழங்கினார்

**அதன் விபரம் வருமாறு:**

கரூர் மாவட்டம், குளித்தலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் குடிமராமத்து திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகள் குறித்தும், வேளாண்மைத்துறை சார்ந்த பணிகள் குறித்தும் ஆய்வு செய்வதற்காக கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் 19.09.2019 அன்று கரூரிலிருந்து குளித்தலை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது குளித்தலை டோல்கேட் பகுதியில் சாலையின் நடுவே சுமார் 70 வயது மதிக்கத்தக்க கருங்கலாப்பள்ளி என்ற ஊரைச் சேர்ந்த முதியவர் திரு.நடராஜன் என்பவர் மயங்கி விழுந்தார்.

அவரை பொதுமக்களுடன் இணைந்து தூக்கிச்சென்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆசுவாசப்படுத்தினார். அப்போது, அந்த முதியவரின் குடும்ப நிலை குறித்து ஆய்வு செய்து தகவல் தெரிவிக்குமாறு குளித்தலை வட்டாட்சியருக்கு உத்தரவிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், தகுதி இருக்கும் பட்சத்தில் அவருக்கு உடனடியாக முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான ஆணை வழங்கவும் உத்தரவிடடார்.

அதனடிப்படையில், முதியவர் திரு.நடராஜன் என்பருக்கு முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப.,அவர்கள் நேற்று (17.10.2019) குளித்தலையில் வழங்கினார். ஆணையை பெற்றுக்கொண்ட முதியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினைத்தெரிவித்துக்கொண்டார்.

இந்நிகழ்வின்போது, குளித்தலை சார் ஆட்சியர் திரு.ஷே.ஷேக் அப்துல் ரகுமான்.இ.ஆப., வட்டாட்சியர் திரு.மகாமுனி, சமூகப்பாதுகாப்புத்திட்ட வட்டாட்சியர் திரு.புகழேந்தி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.